# BENEVOLENT IAS ACADEMY

1626A, Sri Vinayaga Complex, Avinashi Road, Hope College,
Peelamedu (PO), Coimbatore – 641004.
Cell: +91-9787731607/9787701067.
Web: www.benevolentacademy.com E-Mail:benevolentacademy@gmail.com

# DAILY IMPORTANT CURRENT AFFAIRS

# TNPSC Group I, II/IIA & IV

DATE: 02.04.2025

1) புவிசார் குறியீடு

புவிசார் குறியீடு கும்பகோணம் வெற்றிலைக்கு கிடைத்துள்ளது. இந்த வெற்றிலை **காவிரி ஆற்றுப்படுகையில்** விளைகிறது. இது தனிச்சுவை மற்றும் மருத்துவ குணம் கொண்டது. தஞ்சை மாவட்டத்தின் முதல் வேளாண் பொருளுக்கு இந்த புவி சார் குறியீடு கிடைத்துள்ளது.



தோவாளை மாணிக்க மாலைக்கு புவிசார் குறியீடு கிடைத்துள்ளது. இது புவிசார் குறியீடு பெறும் முதல் பூமாலை, 400 ஆண்டுகள் பாரம்பரியம் கொண்டது. இந்த பூமாலை சிவப்பு அரளி, பச்சை நொச்சி, சம்பா நார் கொண்டு மாலையாக கட்டப்படுகிறது.

**புவிசார் குறியீட்டில் உத்திரபிரதேசம் 75 பொருட்களுடன் முதலிடமும், தமிழ்நாடு 62 பொருட்களுடன் இரண்டாம் இடமும் பெற்றுள்ளது.**

2) மா அரங்கநாதன் இலக்கிய விருது 2025

2025 - க்கான மா அரங்கநாதன் இலக்கிய விருது பேரா.தமிழவன் மற்றும் ப. திருநாவுக்கரசு ஆகியோருக்கு வழங்கப்படுகிறது. இந்த விருது 2018 முதல் வழங்கப்படுகிறது. மா அரங்கநாதன் என்பவர் இலக்கிய உலகில் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கியவர்.

3) **The Great Conciliator - Lal Bahadur Shastri and the Transformation of India** - எனும் நூலின் புத்தக ஆசிரியர் **சஞ்சீவ் சோப்ரா**

4) **2025 ராணுவ தளபதிகள் மாநாடு**

மாநாடு நடைபெறும் இடம் - புதுடில்லி

பங்கு பெறுபவர்கள் **பாதுகாப்புத்துறை அமைச்சர்** ராஜ்நாத் **சிங்** மற்றும் முப்படை **தலைமை தளபதி அனில் சௌகான்.** இந்த மாநாட்டில் நாட்டின் பாதுகாப்பு குறித்து ஆய்வு செய்யப்படுகிறது.

5) இந்திய ஹாக்கி வீராங்கனை வந்தனா கட்டாரியா ஓய்வு அறிவிப்பு.

இவர் உத்தரகாண்டை சேர்ந்தவர். இவர் **ஒலிம்பிக் போட்டியில் (2020) ஹாட்ரிக் கோலடித்த முதல் மற்றும் ஒரே இந்திய வீராங்கனை**. கேப்டனாக அதிக ஆட்டங்களில் செயல்பட்ட ஒரே வீராங்கனையும் இவர் ஆவார்.

6) **காவிரி - வைகை - குண்டாறு இணைப்பு திட்டம்**

இந்த திட்டம் 2008 இல் கலைஞர் கருணாநிதியால் முன்மொழியப்பட்ட திட்டம். இது மூன்று கட்டங்களாக திட்டமிடப்பட்டுள்ளது

1) காவிரி to தெற்கு வெள்ளாறு

2) தெற்கு வெள்ளாறு to வைகை

3) வைகை to குண்டாறு

7) **உலக ஆட்டிசம் விழிப்புணர்வு தினம் ஏப்ரல் 2**

8) **2025 - 26 நிதியாண்டில் மூலதன செலவு ரூபாய் 11. 21 லட்சம கோடி**

2024 - 25 மூலதன செலவு ₹ 11.11 லட்சம் கோடியிலிருந்து ரூபாய் 10.18 லட்சம் கோடிக்கு குறைந்தது. தமிழகத்திற்கு மாநிலங்களுக்கு வழங்கப்படும் வட்டியில்லா 50 ஆண்டு கால கடனுதவி ரூபாய் 17,189.05 கோடி கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது.

9) **நூலகப்பெயர்கள்**

திருச்சி நூலகம் - காமராஜர் பெயர்

கோவை நூலகம் - தந்தை பெரியார் பெயர்

சென்னை - அறிஞர் அண்ணா பெயர்

மதுரை - கலைஞர் கருணாநிதி பெயர்